# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1700/18 - 2011 අප්‍රේල් 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.04.07

*1700/18 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது


## அரசாங்க அறிவித்தல்கள்

### *1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் சட்டம்*

*5 (5) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2011, ஏப்பிறல் 12 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு, வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஆகிய நான், 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவத்தினைக் கொண்டு இவ் அறிவித்தலை வழங்குகிறேன்.*

(அ) ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்திற்கு 5 மணி 30 நிமிடங்கள் முன்னதாக இருக்கும் வகையில் இலங்கையின் நியம நேரத்தை நிர்ணயித்தல் மற்றும் ;

(ஆ) இலங்கையின் நியம நேரத்திற்கு அமைவாக ஏதேனும் ஆவணம் அல்லது வாய்மூல ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ளுதல்.

இவ்வறிவித்தலில் -

"ஒருங்கிணைக்கப்பட்ட நியம நேரம் (UTC) " என்பது, சர்வதேச நிறையிடல் மற்றும் அளவீடுகள் பணியகத்தினால் நிர்ணயிக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் இலங்கையில் பேணப்பட்டு வரும் நேரமாகும்.

"ஆவணம்" என்பது ஏதேனும் எழுத்துமூல சட்டம், தீர்ப்பு அல்லது நீதிமன்ற கட்டளை, உறுதி, ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது ஏதேனும் அதனையொத்த ஆவணத்தினை உள்ளடக்குகின்றது.

ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ,
கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
*2011, ஏப்பிறல் 07.*

*04- 648*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.